முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

OS. 29/2022

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22ஆம் நாள் வா.த.சா 1–ன் வாக்குமூலம்

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி முதன்மை மாவட்ட நீதிபதி திருமதி. .ஜி.சுபத்திரா தேவி, எம்.எல்., அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கலா | வயது | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | ரனதேவ் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

பிரதி வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் படித்துள்ளேன். இந்த வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும். நான் சொல்லி தான் என் வழக்கறிஞர் தாக்கல் செய்தார். என் அப்பா 1984ல் இறந்துவிட்டார். என் அப்பாவிற்கான இறுதி சடங்கினை 2ஆம் பிரதிவாதி நடராஜன் தான் செய்தார் என்றால் ஆமாம். 1993 ல் 5 1/2 சென்ட் அவருக்கு தான செட்டில் மெண்ட் எழுதிகொடுக்கப்பட்டது என்றால் எழுதிகொடுக்கவில்லை, எனக்கு வேண்டும் என்று கட்டாயப்படுத்தி அவரே எடுத்துக்கொண்டார். அந்த சொத்தின் சர்வே எண் எனக்குத் தெரியாது. நான் சொல்வது போல் கட்டாயப்படுத்தி எடுத்துக்கொள்ளவில்லை என்பதும், என் விருப்பப்படி தான் எழுதிக்கொடுக்கப்பட்டது என்பதும் சரியல்ல.

உண்மையில் நான் சொல்வது போல் கட்டாயப்படுத்தி இருந்திருந்தால் அது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்து நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் அப்போதைய காலக்கட்டத்தில் நாங்கள் அவரை சார்ந்து தான் இருந்தும் மேலும் அனைத்தும் அவரை சார்ந்து இருந்ததால் அப்படி எழுதிகொண்டார். தாவா சொத்துக்கள் 24/12 ல் உள்ள சொத்து தற்போது என் அனுபவத்தில் இருக்கிறதா என்றால் என் சித்தப்பா அதனை கிரையம் கொடுத்துவிட்டார், அவர் கையெழுத்து போட சொன்னார், அவர் சொன்னதை செய்தோம். நான் 18 சென்ட் நிலம் விற்கவில்லை என் சித்தப்பா தான் கல்யாணத்திற்காக விற்றார். அந்த நிலத்தினை வாங்கிய தயாளனை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. 22.03.1993 ல் எங்களுக்குள் பாகம் ஏற்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது. அந்த பாகப்பத்திரத்தின் படி தான் நான் தற்போது சொத்தினை ஆண்டு வருகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தவிர வேறு வழக்கு குறிஞ்சிப்பாடியில் உள்ள 5 சென்ட் நிலத்திற்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கு எண் எனக்குத் தெரியாது. OS 44/2019 என்றால் சரிதான். தேக்கு மரங்களை வெட்ட வந்ததால் அந்த வழக்கினை தாக்கல் செய்தேன். தற்போது அந்த வழக்கு எந்த நிலையில் உள்ளது என்றால் விசாரணை முடிந்து ஆர்கியுமெண்ட் முடிந்துவிட்டது. இரண்டு வழக்கும் ஒரே நீதிமன்றத்தில் நடத்த கூறி Transfer OP மனு தாக்கல் செய்துள்ளேன் என்று சொல்லி குறிஞ்சிப்பாடி நீதிமன்றத்தில் நான் அவகாசம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான்.

நான் அது போல் Transfer OP மனு எதுவும்  தாக்கல் செய்யவில்லை என்பதும், ஒரே பரிகாரம் கோரி இரண்டு நீதிமன்றத்தில் காலம் கடந்து வழக்கு தாக்கல் செய்ததால் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்பதும் சரியல்ல. நான் பொய்யான அம்சங்களை கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.